உ
சிவமயம்

# இந்து சாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

# HINDU ORGAN

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

பிரதி விலை: சதம் 20.

ஆரம்பம் விரோதி வருடம் (1889 ஆவணி 28-ம் உ) காரியாலயம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 650, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத் - கூ0] யாழ்ப்பாணம்: . காலயுத்தி வருடம் வைகாசி மீ ரு - உ வெள்ளிக்கிழமை (19 - 5 - 1978) [இல - ரு

# ‘இலக்கியக் கலாநிதி’

## பண்டிதமணிக்குப் பல்கலைக்கழகப் பட்டம்



கல்விப் பெருந் தகைமைக் கண்ணியம் வாய்ந்த புலவர்கள் பண்டிதர்கள், வித்துவான்கள் பல்கலைக் கழகத்தைச் சாராதவர்களாய் இருக்கின்றனர், தரம் வாய்ந்த சங்கங்கள், ஆதீனங்கள், முதலியன கற்றோரைக் கண்ணியப் படுத்தும் முகமாகக் கௌரவப் பட்டங்களை வழங்கும் வழக்கம் உண்டு. இத்தகைய பட்டங்களைப் பெற்றவர்களைப் பல்கலைக் கழகம் பாராட்டுவதெனறால் அவர்கள் தங்கள் துறைகளிலே அரிய நூல்களையியற்றியும் ஆராய்ச்சிகளை வெளியிட்டும் தங்கள் ஆற்றலையும் தகைமையையும் நன்கு புலப்படுத்தி இருக்கின்றனர் என்றே கருத வேண்டும்.

தொல்கலைத் தூயதமிழ் தோய்ந்து சுருதிநெறி
மல்குகுலப் பண்டித மாமணியைப் — பல்கலை
காக்கும் கழகம் கலாநிதிக் காவலனாய்
ஆக்குதல், யாருக் கணி.

இலங்கைப் பல்கலைக் கழகம் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களுக்கு ‘இலக்கியக் கலாநிதி’ என்ற பெருமையைக் கழக விதிப்படி கணித்துப் பட்டம் அளிக்கின்றனர், தமிழையும் அம்மொழிப் பெருமையையும் வளர்க்கும் பணியே பணியாகக் கொண்ட பண்டிதமணி புலமைப் பாரம்பரியப்பெருநிதிக்குரியவர். இருமரபும் குருவழி தமிழ் சமஸ்கிருதம் சைவ சித்தாந்தம் ஆகியவற்றைக் கற்று, கற்றதனை நன் மாணுக்கர்களுக்கூந்து கற்றுணர்ந்த சால்பின்வழி சார்ந்தொழுகி நிற்கின்ற குலநலப் பண்டிதமணி பற்றற்ற வாழ்வு நடத்தும் பிரமசாரி. அவர்க்குற்ற பற்றொன்றுண்டு. முத்திபெற முயலும் வழியில் உத்தம நூல்களைக் கற்று ஆய்ந்து தெளிந்து தாம்பெற்ற அறிவின்பத்தை யாவரும் பெற உரைத்து உவகை கொள்வது அவரது உள்ளப் பெருக்காகும்.

# வைகாசி மூலம் தெய்வீகச் சிறப்புடையது

1-ம் திருமுறையில் திருச்செங்காட்டங் குடிப்பதிகத்தில்,

‘பொடிநுகருஞ் சிறுத் தொண்டர்க் கருள்செய்யும் பொருட்டாகக்
கடிநகராய் வீற்றிருந்தான் கணபதீச் சரத்தானே’’

என்று சம்பந்த சுவாமிகள் பெருமதிப்புக் கொடுத்தமைபோல, 3-ம் திருமுறையிலே பதிகம் முழுவதிலும் சிறுத்தொண்ட நாயனார் பெயர் வருதல் சிறப்பாகும்.

ஆளுடைய பிள்ளையாரின் குருபூசை வைகாசி மூல நன்னாளில் வருகின்ற எண்ணம் தொடவே மூன்றுந் திருமுறையை உள்ளம் நாடுகின்றது. சம்பந்தப் பெருமான் எமக்குத் தந்த திருமுறைச் செல்வம் அவ்வளவும் விலை மதிப்புக்கப் பாற்பட்டது. எனினும் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது வேத நான்கினும் மெய்ப்பொருளாவது நாத நாம நமச்சிவாயவே என்ற பதிகம் பதிந்த மூன்றாவது திருமுறை, மேலாகச் சாற்றுகின்றது. திருவைந்தெழுத்தின் பெருமையைத் தரும் அரியமுதமல்லவா? தக்கது எது? தகாததெது? எனத் திரை எடுத்தோடும் தண்ணீர்நடுநின்று கொள்ளவுபநாணிலத்தில் வான் புகழ் சைவநெறி மேன்மை நிலவவும் இறையருள் நிறைந்த திருப்பாசுரம் திகழுவது மூன்றும் திருமுறையிலே.

சேதுக்கரையில் உள்ள தோர்சிவன்கோயில். செங்கண்மால் இத் திருத்தலத்திலே பூசை செய்த சிறப்புக் காண அங்குற்ற திருஞான சம்பந்தப் பிள்ளையின் உள்ளத்தில் ஒருவாறு ஈழத்துச் சிவத் தலங்கள் தோன்றவும் அவற்றைப் போற்றிய பதிகங்களில் ஒன்றாகும் ‘ நிரைகழ லரவம் சிலம்பொலி யலம்பு நிமலர் நீறணி திருமேனி’’ என்ற அடியுடன் அமையும் தேவாரம் மூன்றாந் திருமுறைக்கண் உள்ளது.

[வளர்ச்சி 2-ஆம் பக்கம்]

## கந்தபுராணம் இன்னிசை விரிவுரை

கொக்குவில் புதுக் கோயில் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் திருவிழாவை முன்னிட்டு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ பரமாச்சார்ய சுவாமிகளது பிரதம சீடன் வண்ணை பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா அவர்கள் தினமும் இரவு 7மணி தொடக்கம் 8 மணி வரை பக்கவாத்திய சகிதம் கந்தபுராண தொடர் விரிவுரை நிகழ்த்தி வருகின்றார்.

நாளை நாடெங்கும் கூடுமிடம்

# நன்னகர் மாதோட்டம்

## திருக்கேதீச்சரத் தேர்விழாக் காணுதிருக்க முடியுமா?

கூடிக் கூடி யடியார் கூடுமிடம் பாலாவிப் பதிக்கரையாகும்.

ஆடிப் பாடி அன்பர்கள் தேடுமிடம் மாதோட்ட வளநகராகும்.

தேரோடும் திருவீதிச் சிறப்பும் பாலாவி நீரோடும் தீர்த்தச்சிறும்பத்தி வேரோடும் பல்லாயிரக் கணக்கான அடியார்களின் உள்ளச் செம்மையும் ஒருங்கே சம்பந்தப் பெருமானின் தலப் பதிகத்தையும் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் கோயிற் பதிகத்தையும் ஞாபகப்படுத்தும் முறையில் அமைவது ஒரு அணியாகும் இப்புனித ஈஸ்வரத்துக்கு.

கதிர்காமத்திலே கந்தப் பெருமானின் அருளை எதிர்பார்த்துச் சென்ற பல்லாயிரவர்கள் இன்றைய நிலைமையில் ஆங்கு செல்ல முடியாத வகையிலே திருக்கேதீச்சரத்திலே அமைந்துள்ள முருகப்பெருமானை முன்னிட்டு விழா வெடுக்கும் முறையும் உள்ளதால் யாத்திரிகர் இத்தலத்துக்குச் செல்வதின் பெருமை இம்மாத்திரமல்ல.

பெருவிழாச் சிறப்பைப் பேசவும் வேண்டுமோ! யாழ். மாவட்டக் கல்லூரிகள் பல விழா உபயம் எடுக்கும் விசேடம் வழிபாட்டழகுக்கு மேலும் அழகு செய்கின்றது.

# ஆறுபத்து ஆண்டு ஆனபேறு

## ஆத்மஜோதி ஆசிரியருக்கு அமைந்தது

சாத்திரமும் தோத்திரமும் சற்குருவா னேருறவும்
யாத்திரையுஞ் சொல்லெழுத்(து) ஆற்றலும் — ஆத்தும
சோதிரு முத்தையா தூயதொண்டாய்க் கொண்டார்
மேதினியில் மேன்மையென் வேறு.

மானுடப் பிறவி அரிதானதென்பர் அறிஞர் என்னே? ஞான வழியில் நின்று முத்திக்கு ஆன பேற்றினை அடையும் வாய்ப்பை நல்குவதால்.

ஆத்ம ஞான அப்பியாசத்தில் ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்கள பிறவிப் பயனைப் பெற அவாவி நிற்றல் சைவ சமயிக்குரிய இலட்சியத்தில் அணைவதாகும்.

சான்றோர் சகவாசத்தை ஆன்றோர் அறிவுரைப்படி சார்ந்து ‘ஆத்ம ஜோதி அன்பர் மேன்மைகொள சைவ நீதி நெறியை நன்குணர்ந்து அவ்வழி வாழ்ந்து வருவது போற்றற்குரியது. இதற்குச் சான்று பல பெரியார்கள் பகர்ந்திருக்கின்றனர்.

இந்துசாதனமும் இந்த நற் பேற்றினை ஏத்துகின்றது. ஆத்ம பலம் அமைந்தால் ஆறுபத்தல்லப் பன்னிரண்டு பத்தாண்டுகள் வாழ்வதரிதல்ல. அவ்

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் வீழ்க தண்புனல்
வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே சூழ்க வையக முந்துயர் தீர்கவே,
திருச்சிற்றம்.

# இந்துசாதனம்

காலயுத்தி ஞூ வைகாசி மீ ரு-உ வெள்ளி

## இம்முறையை எல்லோரும் இயக்கினல்

திருக்கோயில்களில் நிகழும் பெருவிழாக்கள் அநேகமாகத் தனி உபயமாகவே நடப்பது வழக்கம். சில சமயங்களிற் கும்ப நிகழ்ச்சியாயிருப்பதுவும் உண்டு. திருக்கேதீச்சரத்தில் முதன் முறை ஒழுங்கு செய்யப்பட்ட கார்த்திகைத் திங்கள் விழாக்களுக்குப் பல ஊர்கள் அடங்கிய காரியாதிகாரிப் பகுதிகளே உபயங்களை ஏற்றன. இந்த ஒழுங்கு மிகவும் பயனைக் கொடுத்து வந்ததை அடியார் அறிந்தார்கள். திருக்கேதீச்சரத் திருப்பணி வேலையும் முன்னேற்றம் அடைந்தது. எல்லோரும் சேர்ந்து இறைவனுக்குத் தொண்டு செய்யும் கூட்டுறவுக் கொள்கையைக் கூட்டி வைத்தது.

அதன்பின்பு ஆண்டு விழாக்கள் ஆரம்பமான பொழுது கல்லூரிகள் பல அவ்வுபயங்களைப் பெற்று இதுவரை மிகச் சிறப்பாக நிகழ்த்தி வருகின்றன. ஆசிரியர்கள் மாணுக்கர் மட்டுமல்லப் பெற்ருேரும் இவ் விழாக்களில் உபய பங்கு கொண்டு உணர்ச்சியுடன் திருத்தொண்டு செய்யும் சிறப்பு விளங்கி வருவது ஒரு நன் முன்மாதிரியாகும்.

காக முறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டா காரசிவ
போகமெனும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப்
பூரணமாய்
ஏகவுரு வாய்க்கிடக் குதையோ இன்புற் றிடநாம் இனியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேர வாருஞ் செகத்தீரே.

தனி உபயத்துக்கும் கூட்டு உபயத்துக்கும் வெவ்வேறு சிறப்புகள் அமைந்திருந்தாலும் ஒருங்கு சேர்ந்து பாடசாலைக்குரியவர்கள் ஆற்றும்பணி தனிப் பண்பினைக் காட்டுவதைத் திருக்கேதீச்சரத்திலே நேரிற் காணலாம். மாவைக் கந்தன் கோயிலிலும் கல்லூரிகள் விழாக்களிற் பங்குகொள்ளும் ஒழுங்குண்டு. வேறுஞ் சில ஆலயங்களில், பழம் பிள்ளையார் கோயில் உதாரணமாக, கலாசாலைகள் தொண்டு புரியும் வழக்கம் உண்டு.

இந்த முன்மாதிரி நாடெங்கும் நியமமான நிகழ்ச்சியாக விரிந்தால் ஆலய வழிபாடு திருப்பணி முயற்சி முதலியன மேலோங்குவதுடன் மக்கள் எல்லோரும் கட்டாய திருக்கோயிற் சேவையில் ஈடுபடும் முறையும் உண்டாகுமன்ருே.

உலக நிலை கவலைக்குரியதாய் விட்டது, பழி பாதக வழியைக் கைக் கொள்வோர் ஏனையோரை நல்லொழுக்க முள்ளவர்களா யிருப்பதையும் தடுத்து வரும் சீர்கேடு நிலவி வருகின்றது. இதற்கு ஒரே ஒரு மருந்துதான் உண்டு. சித்தந் தெளிவிக்கும் மருந்து தெய்வ வழிபாடு. எனவே இந்நாட்டிலுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களும் அவ்வப் பகுதியிலுள்ள திருக்கோயில் வைபவங்களில் உபயகாரராக முன் வந்து சிவத்தொண்டு புரிந்து தம்மையும் தம்மைச் சேர்ந்தவர்களையும் சமுதாயத்தையும் நல்வழிப்படுத்தும் பணியில் ஈடுபடுவதே இப்பொழுது செய்யப் படக்கூடிய சீர் திருத்தம்.

## வைகாசி மூலம்

(1-ஆம் பக்கத்து வளர்ச்சி)

சேக்கிழார்பெருமான் இந்த வரலாற்றைக் கூறுமிடத்து

"அந்நகரில் அமர்ந்தவர்கள் இனிதுமேவி
ஆழிபுடை சூழ்ந்தாங்கு ஈழந்தன்னில்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்து செங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப்பாடி

என்று சம்பந்த சுவாமிகளின் திருநோக்குக்குத் திருக்

## நியம நெறி

சிந்தை தெளியத் திருநீறு பூசுமின்
முந்து சிரசு முழுநெற்றி — கந்தரம்
மார்புதோள் கைவிலா மற்றங்கங் கள்யாவும்
நேர்பொழுது மூன்றும் நிதம்.

## மாணுக்கர்கள் மாண்புற வழிகாட்டிய பேராசான்

(முன் வளர்ச்சி— 4)

ஒழுக்கத்தால் விழுப்பம் உடைய ஒருவர் ஆசிரியரானுல் அவர்பாற் கல்வி கற்கும் பிள்ளைகள் எவ்வகையிலும் நன்னெறியை நாடியே நிற்பார்கள். சைவப் பெரியாரின் மாணுக்கர்களாக இருந்தவர்கள் பலர் வாழ்க்கையில் மாண்புடையவர்களாய் வந்திருக்கின்ருர்கள். இவர்களின் முன்னேற்றம் ஆசிரியனின் ஆற்றலை விளக்குகின்றதெனலாம்.

பரமேசுவர மகாவித்தியாலயத்திலே சிரேட்ட வகுப்பிலே தூய கணிதம் கற்பித்த முறையை எடுத்துரைக்கின் இக்கால ஆசிரியர்கள் ஆச்சரியப்படுவர் கரும்பலகையில் வெண் கட்டியாற் பாடங்களை விளக்கும் நுண்மை சைவப் பெரியாரின் பெரும் புலமையைக் காட்டியவண்ணம் மாணுக்கர்களை ஊக்குவித்துடன் கற்கும் ஆர்வத்தைப் பேண உதவியது கல்லூரியிற் சிவபாதசுந்தரனுரின் ஆசிரிய சாதனை எல்லோருக்கும் எடுத்துக் காட்டாக நின்றமையால் அவர்தம் மாணுக்கர்கள் வாழ்க்கையில் அதி உன்னதப் பதவியில் வீற்றிருக்கவும் சிறந்த சமயிகளாக வழிகாட்டவும் உதவும் அறிவை அநுபவித்தனர்.

விவேக சாதனைக்குரிய சுலோகங்கள் எம்மொழியில் உள்ளன, இதர மொழிகளிலும் இருக்கின்றன, ஆனுல் அவற்றுக்கு உதாரணமாக விளங்கினவர்களென்று சொல்லுவதற்கு ஒரு சிலரே உளர். 'சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்' என்பது இலக்கணத்துள்ள இயலாகும். இதனை எல்லோரும் கற்றிருப்பர். ஆனுல் அக் கருத்தினை உற்றுணர்ந்து அவ்வழி அமைவது அரிது. அரிதினும் அரிது. எங்கள் சைவப் பெரியாரோ இரத்தினச் சுருக்கத்துக்கு என எழுந்தவர் என்று சொல்லி மகிழ்வோம்.

சொற்களோ சொற்பம். கற்பிக்கப்படுவதோ பொற்பிற் பெரியது.

யாம் மாணுக்கனுக இருந்தபொழுது சைவப் பெரியார் சைவக்கிரியை விளக்கம் என்ற நூலை எழுத ஆரம்பித்தனர். அங்கும் இங்கும் அலைந்து திரியும் எம் மந்திக்குணத்தை மாற்றப் பெரியார் ஒரு தந்திரத்தைக் கை ஆள்வது வழக்கம். மிகப் பெரிய பணியை எம் மீது சுமத்துவதே அது. பல சாத்திர நூல்களைத் தந்து அவற்றுட் குறிப்பிடப்பட்ட சில பந்திகளிலுள்ள பொருளைத் தொகுத்துத் தொடுத்தெழுதும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டதும் நாம் எம்மைப்பற்றி ஆசிரியர் பெருமதிப்புக் கொண்டிருக்கின்ருரென்ற மமதையோடு உள்ளே ஒன்றுமில்லாத பொருள் தவளிச் சத்தம் எழுப்புவதுபோல ஆரவாரமாக ஆலாபரணத்தோடு மூன்று பக்கங்களிற் குறிக்கப்பெற்றவற்றை வரைந்தேன். ஆகின்று கின்றுகிற சால உறுதவ நனி வான் பாக்கு என்றவற்றையெல்லாம் மனம்போனவாறு புகுத்தி யாம் படைத்த வெற்றனது ஆசிரியரின் பரிசீலனையில் அப்படியே இற்றுப் போனது. எஞ்சிய வசனங்கள் இருபதே. ஓராண்டு முழுவதிலும் பெறும் அநுபவத்தை ஒரு பொழுதிற் பெற்றேம். எமது வெறுமையை யுணர்ந்தேம். சொல் தொடுத்துப் பொருள் கொடுக்க வைப்பது கல்வியின் பேருக வேண்டுமென்பதை யறிந்தேம். இது ஒரு உதாரணம். இந்த அநுபவத்துக்கு வாய்ப்பாக அப்பொழுது கேம்பிறிச்சுப் பல்கலைக் கழகம் நடாத்திய சிரேட்ட தராதரத் தேர்வுக்குப் புகழ் பெற்ற வேக்கன் என்ற நூலாசிரியரின் கட்டுரைகள ஒரு பாடம். சைவப் பெரியாரின இரத்தினச் சுருக்கம் அந்நூலிலும் இயைந்திருந்தது. மகாகவி சேக்ச்பியர் இந்த வேக்கன்தான் என்று ஆராய்ச்சியாளர் கூறியபோது எங்கள் ஆசிரியரும் மகாகவி வேக்கன் பிரபு போன்ருேர் வரிசையில் உள்ள நூல் ஆசிரியர் என்பதை உணர்ந்து உள்ளத்துவகைகொள்ளாதிருக்க முடியுமா?

கோணேஸ்வரமும் திருக்கேதீச்சரமும் உள்ளானவை என்று நினைவூட்டுகின்றனர்.

ஆளுடைய பிள்ளையாரின் குருபூசைப் பெருநாள் நினைவில் மூன்ருந் திருமுறை உள்ளத்தை நெகிழச் [illegible] நமச்சிவாயத் திருப்பதிகத் [illegible] ஓதுக.

—0—

## சர்வ சமூக சேவையாக

3-ம் பக்கத் தொடர்ச்சி

வசமாக, பொதுசனங்களாகிய நாங்கள், அலர் கிறுவிய குற்றத் தவிர்ப்பு இயக்கத்தை ஆர்வத்துடன் பின்பற்றி குற்றங்களை நீக்குவதற்கோ அல்லது குறைப்பதற்கோ வேண்டிய நிரந்தரமான கிறவனங்களையோ அல்லது சூழ்நிலைகளையோ உண்டாக்கத் தவறிவிட்டோம்.

இந்த நிலையில் தேசிய தர்மீக சமூகத்தை அமைத்தல் என்பது முடியாத காரியமாகலாம் நாட்டின் முதற் பகைவன் என்று சொல்லக்கூடிய குற்றச் செயல்களின் அதிகரிப்பை நிறுத்தாவிட்டால் எமது நாட்டை தர்மதீபம் என்க் கொள்ளல் அர்த்தமற்றதாகும்.

முதல் நடவடிக்கையாக தேசியபேரவைவிசாரணைக் குழு அல்லது ஜனுதிபதி ஆணைக்குழு ஒன்றினை அமைத்தல குற்றச்செயல்களைக் குறைப்பதற்கு உதவியாக இருக்கும் அப்போதைக்கப்போதுள்ள தேவைக்கு பொது சனத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட குழுக்கள் கணிசமான அளவு சேவைகளையும் ஒத்துழைப்பையும கொடுக்கலாம்.

இந்த அதிமுக்கியமான தர்மகைங்கரியத்தில் முதல் நடவடிககைகளை எடுப்பதற்கு ஒருவரும் தாமதம் செய்யவேண்டியதில்லை.

எல்லாம்வல்ல இறைவன் தமது எல்லையற்ற கருணையினுல் எங்களுடைய தாய் நாடாகிய இலங்கைக்கு அருள்புரிவாராக.

அதி பாதகங்களில்.
ஆகப் பொல்லாதது

## சிவநிந்தை

### ஆறுமுக நாவலனுர் கூறியது

கல்விக்குப் பயன் அறிவும், அறிவுக்குப் பயன் ஒழுக்கமுமாம். ஆதலால், தம் வாழ்நாள் முழுவதும் சிவநிந்தை, குரு நிந்தை, சிவனடியார் நிந்தை, வேதாகம நிந்தை, சிவத்திரவியங் கவர்தல், கொலை, களவு, புலாலுண்ணல், கள்ளுண்தல், பிறர்மனைவிழைதல், வரைவின் மகளிர் விழைதல், பொய், அழுக்காறு, புறங் கூறல், செய்ந்நன்றி மறத்தல் முதலாகிய பாவங்களை ஒழித்து; சிவத்தியானம், சந்தியாவந்தனம், பஞ்சாக்ஷர செபம், சிவபூசை, தமிழ் வேத பாராயணம், சிவாலய சேவை, மாகேசுரபூசை, தீக்ஷாகுரு, வித்தியாகுரு, தந்தை தாய் தமையன் முதலிய பெரியோர்களை வழிபடுதல், இரக்கம், பொறை அடக்கம் முதலாகிய புண்ணியங்களை யுடையராய் ஒழுகுக.

அறுபது சாறகளில்
ஒழுகக நெறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூசை செய்பவர்கள்

[ அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் ]

( முன் வளர்ச்சி — 3 )

ஆதிசைவர்கள் பூசிப்பதனுற் சர்வசித்திகளும் உண்டாகும்? சதாசிவ மூர்த்தியினுடைய பஞ்சவத்திரங்களால் தீட்சிக்கப்பட்ட கௌசிகர் முதலிய முனிவர்களுடைய வமிசத்தில் உதித்தவராயும் அங்கப் பழுதற்றவராயும், சமயாசார பரிபாலகராயும், இடம்பம் அசூயை முதலிய குற்றங்கள் அற்றவராயும் உள்ளவரே பரார்த்த பூஜை செய்தற்கு யோக்கியராவர்; உபவீதம் உருத்திராக்ஷம், உட்டிணீஷம், உத்தரீயம், விபூதி என்பவை ஆசாரியருக்குரிய பஞ்ச முத்திரைகளாம். ஆசாரியர் விபரீதக் கிரியைகளைச் செய்தால் அவர் க்ஷயரோகத்தால் தண்டிக்கப்படுவர்.

கோச்செங்கட் சோழநாயனர் புகழ்ச்சோழ நாயனர் அமர்நீதிநாயனர் முதலிய நாயன்மார்களும், முசுகுந்தன் முதலிய அரசர்களும் பிற பெரியோர்களும் ஆகம விதி வழி பெரும் பொருள் செலவிட்டுப் பழைய கோவில்களைப் பெரிதாக்கியும், சீர்பெறப் புதுப்பித்தும், சுற்றுக்கோயில், கோபுரம் முதலிய பல உறுப்புக்களுடன் புதிய ஆலயங்களையுண்டாக்கியும், விதி முறையாற் பிரதிட்டை செய்வித்து நித்திய பூசை புரிவித்தும், திருவிழாக்களைத் தவறாது நடாத்துவித்தும், பூசை விழாக்கள் வழுவாது நடைபெற்று வருவதற்கு நிபந்தங்கள் அமைத்தும், அன்பு மேற்கொண்டு தரிசித்தும் வந்த சிவபுண்ணியப் பேற்றாலன்றோ தாம் தாம் விரும்பிய பயன்களை எய்தி இன்புற்றார்கள். அது பெரிய புராணம், கந்தபுராணம், தல புராணங்கள் முதலியவற்றால் நன்கு தெளியப்படும்.

இப்படியே யொருபகலி லெழுவரையுந் தாபித்து
மெய்ப்பரிவில் வழிபாடு விதிமுறையாற் புரிவித்துச்
செப்பரிய புகழாரூர்த் தேவனுக்கு விழாச் செய்வான்
முப்புவனங் களும்போற்று முசுகுந்தன் முன்னினனுல்.

பூங்கமலா புரிவாழும் புனிதனுர்க் கன்னதற்பி
னோங்குதிரு விழாநடத்தி மொழிந்தபதிப் பண்ணவர்க்கு
மாங்கதுபோ னிகழ்வித்தே யந்தமின்சீர் முசுகுந்தன்
பாங்கில்வருவீரருடன் பாருலகம் புரந்திருந்தாள்.

— கந்தபுராணம் கந்தவிரதப்படலம்.

## பண்ணிசை வகுப்பு

நீர்வேலி இந்துசமய விருத்திச் சபை ஆதரவில் பண்ணிசை வகுப்பு ஆரம்பிக்கப்பெற்றுள்ளது. நீர்வேலி கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் அப்பர் பெருமான் குருபூசைத் தினத்தன்று இவ் வகுப்பு ஆரம்பமானது. தமிழ்மணி எஸ். கணேசசுந்தரன் வகுப்பாசிரியராக நியமிக்கப்பெற்றுள்ளார். ஆரம்ப நாள் அன்று பல அறிஞர்கள் கலந்துசொற்பெருக்காற்றினர்.

## அலங்காரத் திருவிழா

யாழ் / வண்ணை கில்னர் ஒழுங்கையில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் சர்வ சக்தி ஸ்ரீ மகாமாரி அம்பாள் கோவில் அலங்காரத் திருவிழா. வைகாசி மீ 5-ந் திகதி (19-5-78) வெள்ளிக்கிழமை தொடக்கம் 11 நாட்களும் அம்பாளுக்கு பகல் அபிஷேக ஆராதனைகளும் இரவில் அபிஷேகமும் தெருவீதி உலாவும் நடைபெறும்.

## விசாகப் பொங்கல்

யாழ்ப்பாணம் கொட்டடி ஸ்ரீ பாலஞான வைரவ சுவாமி கோவில் வைகாசி விசாகப்பொங்கல் (21 5 78 ஞாயிற்றுக்கிழமை நிகழும் விசேட மங்கல வாத்திய நிகழ்ச்சியும், யாழ். திருமுறை மன்றத்தினரின் பஜனை நிகழ்ச்சியும் கதாப் பிரசங்கமும் சொற்பொழிவுகளும் நிகழும்

# சர்வசமுக சேவையாகக் குற்றத் தடுப்பு இயக்கம் இயங்க வேண்டும்

[ திரு. சு. சிவசுப்பிரமணியம். சட்டத்தரணி ]

( சைவபரிபாலனசபை ஆயுள் அங்கத்தவர் )

இலங்கையில் குற்றச் செயல்கள் அதிவேகமாகப் பெருகுகின்றன. நாட்டை எதிர்நோக்கியுள்ள அபாயங்களுள் இது முதன்மையானது. ஏனைய நாடுகளில் குற்றச் செயல்கள் மலிந்துள்ளன என்ற காரணத்தினுல் நாங்கள் திருப்திப்படமுடியாது. குற்றச் செயல்களை ஆபத்தான தேசிய அபாயமாகக் கருதினுல் அவற்றைப் பார்த்துக்கொண்டு பராமுகமாக இருத்தல் அதனிலும் கூடிய ஆபத்தான அபாயமாகும். பொது மக்களிடமிருந்து உடனடியான நடவடிக்கை தேவைப்படுகிறது. இந்த நேரத்தில் சமயத் தலைவர்கள் சமயத் தாபனங்கள் தேசிய அரசுப் பேரவை மேன்மை தங்கிய சனுதிபதி, அரசாங்கம் சேனைகள் ஊர்ப்பாதுகாவலர்கள் பேரவை எதிர்க்கட்சியினர், எல்லா அரசியற் கட்சிகள். பத்திரிகைகள், நீதி மன்றங்கள், சட்டத்தரணிகள், கல்வி அதிகாரிகள். சமூக கலாச்சார நிறுவனங்கள் ஆகிய எல்லோரும் ஒருமித்து பெருகுகின்ற குற்றச் செயல்களை உடனடியாகத் தடுப்பதற்கும் நிலைமையைச் சீரமைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

வானளாவிய கட்டிடங்களும், காரிய அபிவிருத்தித் திட்டங்களும், கைத்தொழில் வியாபார விவசாய அபிவிருத்தித் சமய உண்மைகளைப் பேரளவில் போதித்தலும் விரிவான சமயக் கிரியைகளைப் பத்தி சிரத்தையின்றி ஆற்றுவதாலும் சர்வதேச மதிப்பும் உறவும் அந்நிய நாட்டு நிதி உதவியும் இந்தக் குற்றச் செயல்களைத் தடுக்காதவிடத்துபயனற்றவையாகவே முடியும்.

பல வருடங்களுக்கு முன்பே இந்நாட்டில குற்ற அதிகரிப்பை எதர்பார்த்த பெரியார்களில் ஒருவராகியவரும், கடவுட் பக்தி நிறைந்தவரும், சட்ட நிபுணரும், நீதி வல்லுனரும், நிர்வாகத்திறமை உள்ளவரும். சட்டமமைக்குப் திறமை வாய்ந்தவரும், கல்விற்பன்னரும் ஆகிய உயர் நீதிபதி M. T அக்பார் Q C அவர்கள் குற்றச் செயலகளின் அதிகரிப்பை மக்களுக்குத் தெரிவித்து நாட்டிலுள்ள பல வேறு தலைவர்களின் உதவியுடன் குற்றத்தவிர்ப்பு இயக்கத்தை ஆரம்பித்து காட்டின் பல பாகங்களிலும் குற்றத் தவிர்ப்புச் சங்கங்களை நிறுவினுர். துரதிஷ்ட

( வளர்ச்சி 2ம் பக்கம் )

# நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல: 13997 ௬௫

1. நடராசா கனகசபை.
2. பெண் தவராசேஸ்வரி, அழகம்பரை, பொலிகண்டி, வல்வெட்டித்துறை — வாதிகள்

எதிராக

[அருபதி அம்மா இறந்து விட்டார்]
கணபதிப்பிள்ளை இராசதுரை.
புதுவளவு ஊர்மனை, பொலிகண்டி,
வல்வெட்டித்துறை. — பிரதிவாதி

மேக்குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கு அனுப்பப்பட்ட (Reissue) கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1978 ம ஆண்டு ஆனிமாதம் 21-ந் திகதி (21-6-78) புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் குறித்த காணியில் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்;

[ கோட்டால் அனுமதிக்கப்பட்ட தொகை ரூபா 4,500/-

தீர்வைத்தொகை

ரூபா 3,560 உம், மேலும் ரூபா 2,000 க்கு 8-6-1977 தொடக்கம் 17-8-1977 வரை எட்டுவீத வட்டியும். முழுத்தொகைக்கும் சட்ட வட்டியான 9 வீதமும், வழக்குச் செலவு ரூபா 400 உம் [இத்தொகையில், ரூபா 2,700 உம் செலவு ரூபா 200 உம் கட்டப்பட்டுள்ளது,

ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று அல்வாய் மழவராய குறிச்சியிறை 'முன்னானே' நிரம்3 இதில் தென் மேற்குப் புறமாக எட்டிலொரு பங்கு நில. பர, 4.1/8 எல்லை கிழக்கு செல்லத்துரை கைம்பெண் தங்கத்துக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், வடக்கு; சின்னத்தம்பி நாகமணிக்கும் எங்களுக்குமுரிய ஆதனம், மேற்கு ஒழுங்கையும் மாணிக்கம் பெண் சிவக்கொழுந்துவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், தெற்குவாரித்தம்பி பெண் செல்லத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ் வெல்லைக்குட்பட்ட நிலம், பனை, வடலிகளிற் சொரியலாய் நாலில் மூன்று பங்கும் ஒழுங்கை உரித்தும்; பதிவு; A 162/ .0.

தி. வேலுப்பிள்ளை ஜே. பீ.

(ஏலதாரர், நீதிமன்ற விற்பனவு ஆணையாளர் விலைமதிப்பாளர்)

"கெச்சர் வாசம்"
வல்வெட்டித்துறை. 15-5-1978

# ஈட்டு வழக்கில் விற்பனவுக்கான அதிகார விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இலக்கம் ௬௫ / 13199

நல்லையா நித்தியானந்தன் துன்னாலை வடக்கு கரவெட்டி — வாதி

எதிராக

மார்க்கண்டு மிருகண்டு துன்னாலை வடக்கு தற்சமயம் 26 கொற மலவீதி தெலவாகொல்ல — பிரதிவாதி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப் படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1978-ம் ஆண்டு ஆனி மாதம் 22-ம் திகதி (22-6-78) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் குறித்த ஆதனத்தில் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மேற் குறித்த பிரதிவாதி குறித்த வாதிக்கு ரூபா 5900/-ம் மேலும் ரூபா 4000/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு எட்டு வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1976 ம் ஆண்டு வைகாசி மாதம் 17 ம் திகதியில் இருந்து தீர்வைத் திகதியாகிய 1976 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 8 ம் திகதி வரையுமான வட்டியும் அதன பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்ட வட்டியான வருடம் ஒன்றுக்கு 100 க்கு 9 வீத வட்டியும் ரூபா 3600/- எதிரி வழக்காளிக்கு 23-9-77 திகதியில் கொடுக்கப்பட்டது.

ஆதன இடாப்பு

கீழே விபரிக்கப்படும ஆதனம் பருத்தித்துறை ஆதன நீதிமன்றத்தில் 12460 ம் இலக்கப்பிரிவிடல வழக்கின விடயப் பொருளாக அமைந்துள்ளது.

1. வடமாகாணம டிஸ்ரிக் வடமாராட்சிப்பகுதி துன்னாலை சேகற்கொடி தேவன் குறிச்சி இறை "நீலியடியான்" தோட்டம் கி பர 9½ கி பர 8½ எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை பெண் செல்லாச்சிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம் வடக்கு வேலப்பர் சின்னையாவுக்கும மறுபேருக்குமுடைய ஆதனம் மேற்கு சின்னையா கைம்பெண அன்னப்பிள்ளைக்கும மறுபேருக்குமுடைய ஆதனம், தெற்கு திருபாலசுப்பிரமணியம் அருமைத்துரையின உரிமைககாரர் உடைய ஆதனம் இதனடங்கலும

கீழேவிபரிக்கப்படும் ஆதனம் பருத்தித்துறைமாவட்ட மன்றத்தில் 12376 ம இலக்கப்பிரிவிடல் வழக்கின விடயப்பொருளாய் அமைந்துள்ளது.

2. இறை "நீலியடியான்" தோட்டம் கி பர 9 5/8 எல்லை கிழக்கும் ஆதனம வடக்கு ரேட்டும் வேலப்பர் சின்னையாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம மேற்கு தாமோதரம்பிள்ளை அரியநாயகத்துக்குடைய ஆதனம் தெற்கு திருபாலசுப்பிரமணியம் அருமைத்துரையின உரிமைக்காரருடைய ஆதனம், இதில் சொரியலாய் 4/5 பங்கும்.

கா. முத்துக்குமாரு ஐயர்
நீதிமன்ற ஆணையாளரும்,
கொமிஷன் விலைமதிப்பாளரும்

தங்கவேல் ஆலயம்,
சந்நிதி வேல,
பருத்தித்துறை, 17.5.78

123. 19-5-78

# அடைவு நகை ஏல விற்பனவு

அரசாங்க உத்தரவுடன் கரம்பன் ஊர்காவற்றுறையில் அடைவு பிடிக்கும் ஸ்ரீமதி சிவகலை கனகரத்தினம் அவர்களின் அடைவு கடையில் 1974 ம் ௵ சித்திரை மீ 1ம் திகதி தொடக்கம் 1976 ம் ௵ பங்குனி மீ 31ம் திகதி வரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் என்னுல் 1978-ம் ௵ ஆடி மீ 10-ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் ஷெ அடைவு கடையிலிருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

துறைமுகம்,
காரைநகர்,
1978 ம ௵ வைகாசி மீ 10ம் திகதி

வை. ஏரம்பமூர்த்தி,
ஏல விற்பனையாளர்.

117 | 12, 19 5.78

# முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தற் படிவம்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 1043

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

காலம் சென்ற கெருடாவில் கந்தன் வைரவனின் மரணசாதன விடயத்தில,

மரணமெய்தியவர்

வைரவன் கைம்பெண் சிவப்பி கெருடாவில்.

மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமனறத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1978-ம் ஆண்டு வைகாசி மாதம் இரண்டாம் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளைப்படி,
(ஒப்பம்) பதிவாளர்
பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்.

1978-ம் ஆண்டு பங்குனி மாதம் 20ம் நாளன்று திகதியிடப்பட்டது.

118 12 [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THOUGHTS TO BE TREASURED

கங்காளன் பூசும் கவசத்திருநீற்றை
மங்காமற்பூசி மகிழ்வாரே யாமாகில்
தங்கா வினைகளும், சாரும் சிவகதி,
சிங்காரமான திருவடி சேர்வரே.

The coat of mail of holy ashes worn by the bone - decked Lord, - if people take delight in wearing them lavishly, sins will not beset them, Godliness will be within their reach and they will attain the resplendent Holy Feet (of the Lord)

Hindu Organ

Friday, 19th May, 1978.

## Trunk Road To Thiruketheeswaram

Running parallel to the Jaffna - Kandy Trunk Road, the route from Chankupiddy to Thiruketheeswaram via Poonakary and Pallavarayarkaddu has, in recent years, arisen in importance and utility. The Restoration of the ancient Temple at Mathod dam by the bank of the pearl white waters of Palavi has in a way helped the re-construction of the Poonakary - Mantai road and the re-opening of many an abandoned farm along with the introduction of schemes of colonisation in this area. Within the space of three decades the entire area that is being served by the Poonakary - Mantai Road has become more productive and has attracted a large number of enterprising farmers.

Now, it will be clear to any administrator in the several departments of Governmental activities in the Poonakary and the Mantai areas that the changed and changing conditions of their localities are such as to press for more and sustained administrative attention. The Irrigation, the Agriculture, the Health, the Education and the Transport Departments have to provide for more extensive and intensive programs of works of restoration, construction and maintenance to enable the people enjoy the minimum needs of a modern developing area.

The Department of Transport and Communications has a special responsibility as all other Governmental programs depend in a large measure on the provision of a reliable and regular Transport Service. But unfortunately this responsibility seems to have been ignored in the recent past. Break-down has become a by word in the Trans port Service. The effect of such dislocation cannot be easily estimated. The passengers suffer untold hardships and bear their burden with a grin. Red - Tapism is not the only cause of such a discreditable performance. It is utter indifference on the part of those responsible to the sufferings of the people.

Thiruketheeswaram Temple has by the unremitting attention of the Restoration Society and the spontaneous response of the Saiva public become as massive and majestic as it ought to be in view of its present glory and its religious status. There are festivals and other special occasions all the year round. Worshippers in their thousands congregate at this renovated ancient shrine as it has assumed priority amongst historic temples. The prevailing circumstances call for super - attention of the needs of Transport by the responsible officers.

What we refer to is the immediate need for re - organising the Transport Service and relaying the Chankupiddy - Thiruketheeswara Road to meet not merely the demands of the Temple Society but also the requirements of the cultivation colonists in this area.

## 71st Birth-day

The seventy first (71st) birthday anniversary of Mr. V. Muttucumaraswamy, falls on Sunday 21st May 1978. He is well known to readers of the Hindu Organ and Inthusathanam and to the general public. Mr. Muttucumaraswamy is a scholar devoted to the cause of the promotion of culture, literature and religion and is the author of several publications. He is at present residing at London with his family and is rendering valuable services to the Tamil and Hindu public. He is a grand nephew of the late A. Moothathambypillai, the respected lexicographer, author and scholar of renown, associated with the names of Navalar Kottam and Ward and Davy at Vannarponnai in Jaffna. A function to celebrate the happy event of the birthday anniversary is being held in London by the admirers of Muttucumaraswamy and a group of literary personalities. Mr. Muttucumaraswamy is assisted in his laudable literary efforts in scholarship by his wife, herself a scholar and educationist with considerable attainments. The good wishes of a large number of persons would be with this earnest and untiring scholar and family on this occasion

### ஆறு பத்து ஆண்டு

[1-ம் பக்கத்து வளர்ச்சி]

வாழ்வு யாவருக்கும் பயனுடைத்தாகும்.

### ஆத்மஜோதிச் சிறப்பிதழ்

சட்டிஅப்த பூர்த்திச் சீர்த்தியைச் சுட்டிக் காட்டும் வகையில் வைகாசியில் வெளிவந்த சிறப்பிதழ் பல அறிஞர்களின் கட்டுரைப் பொலிவுடன் விளங்குவதும் சமயக் குருமார்களின் சால்பு நெறி ஆசிகளுடன் துலங்குவதும் ஆக நன்கமைந்திருக்கின்றது.

ஆசிரியர் திரு நா முத்தையா அவர்களின் சமயப் பணியைப் பூரணமாகப் பிரதிபலிக்கும் வகையில் இச் சிறப்பிதழ் இலங்குவது பொருத்தமே.

### இந்துசாதனம்
சந்தா விபரம்

| | |
|---|---|
| உள்ளூர் — ஆண்டு | 18/— |
| புறநாடு — ஆண்டு | 50/— |
| [ஆகாய வழி] | 75/— |

அதிபர்
450, கே. கே. எஸ். வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

## AUCTION SALE

All the unredeemed Jewelleries pawned with Mrs. Sivakalai Kanagaretnam, Licensed Pawn Broker of Karampon, Kayts, from 1st April, 1974, till 31st March, 1976, will be sold by me by Public Auction at the said Pawn Shop on Monday the 10th of July, 1978, commencing at 9 a. m

Jetty, V. ERAMPAMOORTHY,
Karainagar. Auctioneer.
0th May, 1978. 117 19-5-78

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

வழ. இல. 12522 / பிரிவிடல்

இராமநாதர் சுப்பிரமணியம் இராமநாதன் தும்பளை பருத்தித்துறை — வழக்காளி

எதிராக

1 சந்திரசேகரர் சிவதாசன்:
2. பெண் சந்திர நிலகம் இருவரும் 126 கண்டி ரோட் குருநாகல்,
3. பரமநாதர் நவரட்ணராசா Q C அலெக்சாண்டர் ரோட் வெள்ளவத்தை
4. பெண் சுந்தரநாயகி, அலெக்சாண்டர்ரோட், வெள்ளவத்தை
5. சபாபதி சந்திரசேகரம்
6. கலாநிதி C. கிருஷ்ணபிள்ளை மண்டலேசன்
7. V. கனகறட்ணம் சுப்பிரமணியம்
8. பெண் மணிமேகலை
9. கைலாசபிள்ளை மறுநாமம் செல்லையாபிள்ளை சண்முகநாதன்
10. சண்முகநாதன் பெண் கண்ணகை
11. செல்லத்துரை ஜெயறட்ணம்
12. பெண் பொன்னம்மா
13 கிருஷ்ணபிள்ளை மகள் அமிர்தவல்லி
14 பொன்னையா சிவராசா
15 பொன்னையா சுப்பிரமணியம்
16 கந்தையா தியாகரர்சா
17. கந்தையா சிவதாசா மறுநாமம் சிவராசா
18 செல்லத்துரை தர்மறட்னம்
19 பெண் தங்கம்மா எல்லோரும் புலோலி மேற்கு புலோலி
20. M. சின்னத்தம்பி வேலாயுதபிள்ளை புலோலி மேற்கு தற்காலம் 16 பிரதான வீதி சங்கலடி மட்டக்களப்பு
21 பெண் சிவக்கொழுந்து, புலோலி மேற்கு.
22 சிவப்பிரகாசம் மகள் அமிர்தவல்லி,
23 சிவப்பிரகாசம் மகள் சுந்தரவல்லி.
24 சிவப்பிரகாசம் மகள் இன்பவல்லி
25 சிவப்பிரகாசம் இராதா கிருஷ்ணன்,
26 செல்லத்தம்பி இராமச்சந்திரன் (இறந்தவர்.) எல்லோரும் புலோலி மேற்கு.
26 A இராமச்சந்திரன் கைம்பெண் ஞானசகுந்தலை, 344/1, பேராதனை ரோட், கண்டி.
27 A. சங்கரப்பிள்ளை கைம்பெண் அன்னம்மா, மறுநாமம் சிதேவன்
28 செல்லத்தம்பி முத்துக்கிருஷ்ண
29 செல்லத்தம்பி அருச்சுன
30 கந்தையா சிவதாசா மறுநாமம் சிவராசா பெண் தங்கம்மா எல்லோரும் புலோலி மேற்கு பருத்தித்துறை

எதிராளிகள்

மேற்குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கு மறுமுறையும் அனுப்பப்பட்ட கொமிஷன் (பிரிவிடல்) அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1978-ம் ஆண்டு ஆடிமாதம் 20ம் திகதி (20-7-1978) வியாழன காலை 10 மணிக்கு என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

[கோட்டால் அனுமதிக்கப்பட்ட தொகை ரூபா 7,905/-]

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறை கோயிற்பற்று தும்பளை இறை மட்டிக்குமானுர் வளைக்கடையகாடு நி பர. 3 குளி 8 7/16ம், மட்டிக்குமானுர் வளைக் கடையகாடு நி பர, 4 குளி 5 13/32ம், சேர்ந்து ஒரே காணியாய் உள்ளது. இது 1974ம் ஆண்டு வைகாசி மாதம் 21ம் திகதி 1059ம இலக்கத்துல் நில அளவையாளர் C.C. குமாரசாமியால் தயாரிக்கப்பட்ட படத்தில் காண்பிக்கப்பட்டு இருப்பது. இப்படத்தின்படி நி பர. 9 குளி 8 07 கொண்டது. எல்லை கிழக்கு சீனியனின் உரிமைக்காரனுக்குரிய ஆதனமும், வடக்கு இளையவன் சேகரனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனமும், இளையவன் கந்தையனுக்குரிய ஆதனமும், மேற்கு வல்லி தங்கராசாவுக்குரிய ஆதனம் தெற்கு சின்னக்குட்டி முத்தையாவுக்கும் பெண் வள்ளியம்மைக்கும் உரிய ஆதனமும் இவ்வெல்லைக்குட்பட்ட யாவும்,

தி. வேலுப்பிள்ளை J. P.

"கெச்சர் வாசம்" [ஏலதாரர், நீதிமன்ற விற்பனவு
வல்வெட்டித்துறை ஆணையாளர், விலைமதிப்பாளர்]
15-5-1978 120 19-5.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road, Vannarponnai, Jaffna on Friday, May 19, 1978.

EDITOR-IN-CHIEF: R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org